உ



# ஸ்ரீ தர்மலிங்கேச்வரர் ஆலயம் புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம்

# அழைப்பிதழ்

கோலமே! மேலை வானவர் கோவே! குணம்குறி சிறந்ததோர் குணமே!
காலமே! கங்கை நாயகா! எங்கள் காலகா லா! காம நாசா!
ஆலமே அமுதுண்(டு) அம்பலஞ் செம்பொற் கோயில் கொண்(டு) ஆடவல்லானே!
ஞாலமே! தமியேன் நற்றவத் தாயைத் தொண்டனேன் நணுமா நணுகே,

திருமாளிகைத் தேவரின் திருவிசைப்பா

சென்னை மாநகரின் புறநகர்ப் பகுதியான நங்கைநல்லூரின் தெற்குப் பாகத்தில் சர்வமங்களா நகர் ஈச்வரன் காலனியில் **ஸ்ரீ ஸர்வமங்களா தேவி உடனுறை ஸ்ரீதன்மீசர்** எழுந்தருளியுள்ள பழம்பெரும் ஆலயம் **ஸ்ரீதர்மலிங்கேச்வரர் திருக்கோயில்** இராஜராஜ சோழ மன்னனின் ஆறாவது ஆண்டு ஆளுகைக்காலமான கி.பி. 991-லேயே தன்மீசர் செம்பொன் கோயில் என்று பெயர் கொண்டு விளங்கியதையும், தன்மீச்சுரம் என்று தான் உறையும் சிற்றூருக்கே தன்பெயரைத் தந்து சிறப்பு கூட்டியமையையும் பறை சாற்றும் கல்வெட்டுச் சான்றுகள் கொண்ட இவ்வாலயம், இப்பகுதியிலேயே மிகவும் பழமையான, கருங்கற் கருவறையோடு விளங்கும் ஒரே ஒரு ஆலயமாகும்.

ஆலயத்தில் வேரூன்றி நிற்கும் ஐயனருளின் ப்ரகாசம் கி.பி. 1969ல் வெளிப்பட்டது முதல் இன்று வரை தொழுதோர் எவரையும் கைவிடாது காத்து நின்று பரிபாலித்து வரும் ஸ்ரீதர்மலிங்கேச்வரருக்கு, தற்காலத்தில் கி.பி. 1976, 1992, 2000, 2009 ஆண்டுகளில் நான்கு கும்பாபிஷேகங்கள் நிகழ்விக்கப் பெற்றுள்ளன. ஆலயத்திற்கு வருகை தந்து ஐயனின் அருளைப் துய்க்கும் பேறு பெற்ற அன்பர்களின் ஆதரவு கொண்டு ஜீர்ணோத்தாரண திருப்பணிகளும் செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறே, நிகழும் சுபக்ருது வருஷம் **ஆவணி மாதம் 23ஆம் நாள், 08.09.2022, வியாழக்கிழமை திருவோண நக்ஷத்திரம், சுக்லபக்ஷ த்ரயோதசி சித்த யோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் பகல் 11.00 மணிக்கு மேல் 12.00 மணிக்குள் விருச்சிக லக்னத்தில் இவ்வாலயத்திற்கு ஐந்தாவது கும்பாபிஷேகமாக புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம்** ஐயன் திருவருளும் அனைத்துக் குருவருளும் துணைக் கொண்டு நிகழ உள்ளது மெய்யன்பர்கள் அனைவரும் திரளாகக் கூடி கும்பாபிஷேகத்திற்கு வந்திருந்து தரிசித்து ஸ்ரீ தர்மலிங்கேச்வரரின் திருவருளை நிறைவாகப் பெற்றுத் தழைத்தோங்குமாறு, அவனருளாலே அவன்தாள் வணங்கி வேண்டிக் கொள்கிறோம்.

இங்ஙனம்

**நங்கநல்லூர் ஸ்ரீ சர்வமங்களாம்பிகை பக்த சமாஜம்**

**ஸ்ரீதர்மலிங்கேச்வர ஆலய கும்பாபிஷேகக் குழு**

## நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| ஆவணி<br>17ம் தேதி<br>02.09.2022 | வெள்ளிக்கிழமை<br>மாலை 5.00 மணிக்கு | தேவதா அனுக்ஞை, கிராம சாந்தி |
| ஆவணி<br>18ம் தேதி<br>03.09.2022 | சனிக்கிழமை<br>காலை 8.00 மணிக்கு | மஹாகணபதி ஹோமம், நவக்ரஹ ஹோமம், தன பூஜை, த்ரவ்ய விபாகம் கோ - பூஜை |
| | மாலை 5.00 மணிக்கு | ம்ருத் ஸங்க்ரஹணம், ப்ரவேச பலி, ரக்ஷோக்ந ஹோமம், வாஸ்து சாந்தி |
| ஆவணி<br>19ம் தேதி<br>04.09.2022 | ஞாயிற்றுக்கிழமை<br>காலை 8.00 மணிக்கு | திசா ஹோமம், ப்ரதான ஆசார்யர் தசவித ஸ்நானம், ஆசார்ய வரணம் |
| | மாலை 6.00 மணிக்கு | அங்குரார்ப்பணம், கௌதுக ஹோமம், ப்ரதான ஆசார்யர்கள் ரக்ஷாபந்தனம் |
| ஆவணி<br>20ம் தேதி<br>05.09.2022 | திங்கள் கிழமை<br>காலை 9.00 மணிக்கு | சாந்தி ஹோமம், மூர்த்தி ஹோமம், ஸம்ஹிதா ஹோமம், ப்ரஸன்ன பூஜை யாகசாலை அலங்காரம், அக்னி ஸங்க்ரஹணம் |
| | மாலை 4.00 மணிக்கு | விசேஷ ஸந்தி, விசேஷ தர்பணம், மண்டபார்ச்சனம், கும்பாலங்காரம், கலாகர்ஷணம், யாத்ரா ஹோமம், க்ஷணஹோமம், யாகசாலை ப்ரவேசம், அதிவாஸ யாக ஆரம்பம், முதற்கால பூர்ணாஹுதி தீபாராதனை |
| ஆவணி<br>21ம் தேதி<br>06.09.2022 | செவ்வாய்க்கிழமை<br>காலை 8.00 மணிக்கு | விசேஷ ஸந்தி, விசேஷ தர்பணம், அஷ்டபந்தன பூஜை, அஷ்டபந்தன ஸமர்ப்பணம், 2-ம் கால யாசாலை பூஜை, பாவனாபிஷேகம், த்ரவ்யாஹுதி, இரண்டாம் கால பூர்ணாஹுதி, உபசார தீபாராதனை |
| | மாலை 5.00 மணிக்கு | விசேஷ ஸந்தி, விசேஷ தர்பணம், 3-ம் கால யாகசாலை பூஜை, ஷடத் வந்நியாஸம், மூன்றாம் கால பூர்ணாஹுதி, உபசார தீபாராதனை |
| ஆவணி<br>22ம் தேதி<br>07.09.2022 | புதன் கிழமை<br>காலை 7.00 மணிக்கு | விசேஷ ஸந்தி, விசேஷ தர்பணம், 4-ம் கால யாகசாலை பூஜை, விசேஷ ந்யாஸங்கள், பாவனாபிஷேகம், ஷண்ணவதி த்ரவ்யஹோமங்கள், நான்காம் கால பூர்ணாஹுதி, உபசார தீபாராதனை. |

| | | |
|---|---|---|
| | மாலை 5.00 மணிக்கு | விசேஷ ஸந்தி, விசேஷ தர்பணம், 5-ம் கால யாகசாலை பூஜை, அநிர்வாண தீபஸ்தாபனம், நாடீ ஸந்தானம், தத்வார்ச்சனை, ஸ்பர்சாஹுதி, ஐந்தாம் கால பூர்ணாஹுதி அதிவாஸயாக பூர்த்தி, விசேஷ உபசார தீபாராதனை. |
| ஆவணி 23ம் தேதி 08.09.2022 | வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு | விசேஷ ஸந்தி, விசேஷ தர்பணம், ஆறாம் கால யாகசாலை பூஜை, அவப்ருத யாகம் |
| | காலை 9.30 மணிக்கு | மஹா பூர்ணாஹுதி |
| | காலை 10.00 மணிக்கு | யாத்ராதானம், தசதானாதிகள், கலசம் புறப்பாடு |
| | **காலை 11.00 மணிக்கு** | **ராஜகோபுரம் மற்றும் அனைத்து விமானங்களுக்கும் ஸமகாலத்தில் கும்பாபிஷேகம்** |
| | **காலை 11.30 மணிக்கு** | **ஸ்ரீ ஸர்வமங்களாம்பிகா சமேத ஸ்ரீதர்மலிங்கேச்வரர் மஹாகும்பாபிஷேகம்** |
| | காலை 12.00 மணிக்கு | மஹாபிஷேகம், ஆசார்ய உத்ஸவம், யஜமான உத்ஸவம் |
| | மாலை 6.00 மணிக்கு | திருக்கல்யாண வைபவம் |
| | இரவு 8.00 மணிக்கு | பஞ்சமூர்த்தி திருவீதியுலா |

**கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் 22.10.2022 வரை நடைபெறும். பக்தர்கள் மண்டலாபிஷேகத்திலும் பங்கு பற்றி ஐயனின் அருளைப் பெற்று வளமே வாழ வேண்டுகிறோம்.**

**ஸ்ரீதர்மலிங்கேச்வர ஆலய கும்பாபிஷேகக் குழு**

**ஸர்வஸாதகம்**

சிவாகம கல்பத்ருமம், சிவாகம வாசஸ்பதி, சிவாகம ரத்னாகம், சிவாகம செல்வர், சிவாகம வித்யா ரத்னம், மந்திர ஸேவா மணி, சிவாகம திருத்தொண்டர், சிவாகம பாஸ்கர, சைவ வைதிக ரக்ஷாமணி, சிவாகம வித்யா வாருதி, சிவாகம ஞானபானு, சைவஸித்தாந்த ஆகம ஸாகரம் - சிவஸ்ரீ. க.ராஜப்பா சிவாசார்யர் - காஞ்சீபுரம்.